## மனேஜ்மென்ட் சேர்விசஸ் றக்ஷண (பிறைவேட்) லிமிட்டட்- 2017

---

மனேஜ்மென்ட் சேர்விசஸ் றக்ஷண (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன. நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான ரூபா 1,820,645 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி பணிப்பாளர் சபையின் படிகளிலிருந்து கழிக்கப்படாமல் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2015 மே 18 ஆந் திகதிய பிஈ/ஜஎன்/எஸ்எல்ஜசீ/பொது/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் கடிதம் | ரூபா 1,343,268, ரூபா 1,142,435 மற்றும் ரூபா 45,000 தொகைகள் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் முறையே ஏப்ரல் மிகையூதியம், திசெம்பர் மிகையூதியம் மற்றும் பரிசு சீட்டுக்களாக கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) 1971 இன் 24 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | மதியுரையாளர்களிற்கான கொடுப்பனவு தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான தொழில்தருநர் மற்றும் ஊழியர் பங்களிப்புக்கள் |

செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் சுகயீன விடுமுறையை காசாக்குதல் மற்றும் நீண்ட சேவைக் காலப்பகுதி கொடுப்பனவுகளாக கம்பனியின் ஊழியர்களிற்கு முறையே ரூபா 8,754,281 மற்றும் ரூபா 570,000 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் கம்பனிக்கு ஏற்பட்ட தேறிய மேந்தலைக் கிரயத்தை மீள்நிரப்புவதற்காக ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் லிமிட்டட்டுடன் உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டதன் காரணமாக இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ விளைவித்திருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்ட முகாமைத்துவத்திற்கு (பணிப்பாளர் சபை மற்றும் நிறைவேற்றுப் பதவியணியினர்) சம்பளங்கள் மற்றும் ஏனைய நிதிசார் நலன்களை செயன்முறைப்படுத்துதல் எம்எஸ்ஆர்பிஎல் ஐ கூட்டிணைத்ததன் பிரதான நோக்கமாகும். எனினும் தனியார் கம்பனியொன்றிற்கு இச்செயன்முறை பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எம்எஸ்ஆர்பிஎல் இல் ஊழியர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்காததுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இரண்டு ஊழியர்கள் கம்பனியின் சார்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் எம்எஸ்எல் சிஸ்ரம் (பிறைவேற்) லிமிட்டட்டை ஒருங்கிணைத்திருந்தனர். போட்டித் தன்மையான காப்புறுதிக் கம்பனிகளிற்கிடையே உயர்மட்ட முகாமைத்துவத்தின் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதியங்கள் மிகவும் இரகசியத்தன்மையுடையதாக காணப்படுதல் தனிக் கம்பனியை கூட்டிணைப்பதற்கான காரணமாக இருந்ததென முகாமைத்துவம் கணக்காய்விற்கு அறிவித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 761,174 தொகை சம்பள செயன்முறைப்படுத்தல் செலவினங்களாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆகக்குறைந்த வரித் தேவைப்பாடு தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பொன்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்விபரங்களை வெளிப்படுத்துவதற்கு கம்பனியின் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிக் கணிப்பீட்டின் பிரகாரம் 2016/2017 மதிப்பீட்டாண்டிலிருந்து பெறவேண்டியவைகளாக ரூபா 1,551,544 தொகை முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதி காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016/2017 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி செலவினங்கள் ரூபா 1,132,506 ஆக இருந்ததுடன் கணிப்பீடுகளின் பிரகாரம் இது ரூபா 317,102 ஆக இருந்தமையால் ரூபா 815,404 மேலதிக ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அத்தொகையை சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வரிப் பொறுப்பை கணிப்பிடும் போது செலவினங்களாக ரூபா 509,780 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கருத்திற்கொள்ளப்பட்டிருந்ததால் ஆண்டிற்கான வரிப் பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 14,146,326 மற்றும் ரூபா 32,052 தொகையான முறையே செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய பெறுமதி சேர் வரிக்கான (VAT) விபரமான பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014/2015 ஆம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய வருமான வரியாக ரூபா 1,896,273 தொகை 2017 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டிருந்தது.

(எ) கம்பனியின் ஓய்வுபெற்ற முகாமையாளரொருவர் புலனாய்வு பிரிவிற்கு 2017 பெப்ரவரி 06 தொடக்கம் மே 05 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு மதியுரையாளராக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். எனினும், ஆட்சேர்ப்பிற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தனிநபர் கோவையில் சான்றுகள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய உத்தியோகத்தரின் ஒப்பந்தக் காலப்பகுதி 2017 யூலை தொடக்கம் திசெம்பர் வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், நீடிப்புச் செய்யப்பட்ட காலப்பகுதிக்காக அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் ரூபா 312,000 தொகை மிகையூதியமாக திசெம்பர் மாதத்தில் அவ் உத்தியோகத்தரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) வழமையொன்றாக பெயர்பெற்ற ஆட்சேர்ப்பு முகவரொருவரூடாக கம்பனியின் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், மனித வளங்கள் சிரேஷ்ட முகாமையாளர், பிரதம உத்தியோகத்தர் - பொதுக் காப்புறுதி மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பெறுகை நடைமுறைகளை பின்பற்றாமல் 2017 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு முகவரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,780,028 தொகை தொழில்சார் கட்டணம், வரிகள் மற்றும் ஏனைய செலவினங்களாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஐ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பதவியணியினரிற்கு உரித்துடையதாக கருதப்பட்ட எரிபொருள் மற்றும் தொலைபேசி படிகள் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உரிய காலப்பகுதியினுள் வரி செலுத்த தாமதமானதன் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் தாமதக் கொடுப்பனவிற்கான தண்டப்பணமாக ரூபா 93,806 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.